செய்தி வெளியீடு எண் :11 நாள்:14.05.2019

**தேனி மாவட்டம்**
**பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019**
**வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு**
**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்**
**திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019, 198.ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி மற்றும் 199.பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.05.2019) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019, 198.ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி மற்றும் 199.பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் (18.04.2019) நடைபெற்றது. இத்தேர்தலின் போது பதிவான வாக்குகளை கொடுவிலார்பட்டி கம்மவார் சங்க பொறியியல் கல்லூரியில் 23.05.2019 அன்று எண்ணப்பட உள்ளது.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடவுள்ள அலுவலர்கள் 23.05.2019 அன்று எந்த மேஜையில் பணியாற்றிட வேண்டும் என்பது குறித்து காலை 5 மணி அளவில் கணினி குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். அதன்பின், எந்த மேஜையில் எந்த வாக்கு பதிவான இயந்திரங்கள் எண்ணப்பட வேண்டும் என்பது குறித்தும் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும். ஆகையால், வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்கள் காலை 6 மணிக்குள்ளாக தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை கூடத்திற்கு வருகை தரவேண்டும்.

வாக்கு எண்ணிக்கையின் மேஜையில் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு நுண்பார்வையாளரும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தபால் வாக்கு சீட்டு எண்ணிக்கை துவங்கிய அரை மணி நேரம் கழித்து மின்னணு வாக்கு இயந்திரத்தின் பதிவு வாக்கு எண்ணிக்கை துவங்கப்படும். தபால் வாக்குகள் எண்ணிக்கை முடிவுற்றவுடன் இறுதி கட்ட வாக்கு எண்ணிக்கை நடத்திட வேண்டும்.

மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் நாள் அன்று காலை வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, அங்கிருந்து வாக்கு எண்ணப்படும் மேஜைக்கு கொண்டு வரப்படுவது உள்ளிட்ட அனைத்தும் நிகழ்வுகளும் வீடியோ மூலம் பதிவு செய்யப்படும். வாக்கு எண்ணிக்கையின் போது, குலுக்கல் முறையில் VV PAT- இயந்திரங்கள் 5 தேர்வு செய்யப்பட்டு பதிவான வாக்குகள் எண்ணிக்கை நடத்திட வேண்டும்.

ஒரு சுற்றுக்குத்தேவையான மின்னணு வாக்கு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையிலிருந்து எடுக்கப்பட்டவுடன் அடுத்த சுற்றுக்கான மின்னனு இயந்திரங்கள் எடுக்கப்படும் வரை பாதுகாப்பு அறை பூட்டி வைக்கப்படும். வாக்கு எண்ணிக்கை அலுவலா்கள் வாக்கு எண்ணிக்கை ஆரம்பம் முதல் இறுதி வரை தமக்கு ஒதுக்கப்பட்ட மேஜையை தவிர்த்து வேறு எங்கும் செல்லக் கூடாது. மேஜையின் மீது ஒவ்வொரு சுற்று வாரியாக வழங்கப்பட உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான வாக்குச்சாவடி எண் மற்றும் விபரங்கள் அடங்கிய தாள் வழங்கப்படும்.

வாக்கு எண்ணிக்கையின் போது தங்களுக்கு வழங்கப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டதுதானா என்பதனை உறுதி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள பச்சை நிற அட்டையில் உள்ள எண்ணை 17C விண்ணப்பத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்திட வேண்டும். வாக்கு எண்ணிக்கைக்கான பொத்தானை அழுத்தியவுடன் முகவர்கள் காணும் வகையில் கட்டுப்பாட்டு கருவியினை வைத்துக் கொள்ள வேண்டும்.

கட்டுப்பாட்டு கருவியில் வரும் முடிவுகளை கார்பன் தாள் வைத்து இரு பிரதிகள் தயாரித்து அதில் முகவர்களிடம் கையொப்பம் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கை குறிக்கப்பட்ட இரு பிரதிகளையும் உதவித்தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கிட வேண்டும். உதவித்தேர்தல் நடத்தும் அலுவலா் அதனை பிரதி எடுத்து வேட்பாளா்களின் முகவர்களுக்கு வழங்கிட வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது ஏதேனும் ஐயம் எழும்பட்சத்தில் அதனை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உடனடியாக தெரிவித்திட வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபட உள்ள அலுவலா்களுக்கு 22.05.2019 அன்று எந்த சட்டமன்ற தொகுதியில் பணிபுரிய வேண்டும் என்பதற்கான ஆணையும், 23.05.2019 அன்று காலை அலுவலா்களுக்கு ஒதுக்கப்பட்ட மேஜையின் விபரமும் தெரிவிக்கப்படும். வாக்கு எண்ணிக்கையின் போது அனைத்து அலுவலா்களும் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் பணியாற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலா் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்பில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, உதவித்திட்ட அலுவலர் தண்டபாணி, ஆண்டிபட்டி வட்டாட்சியர் பாலசண்முகம் மற்றும் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலா்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலா், தேனி.**